## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும், புனரமைத்தல் அதிகாரசபைச் சட்டம்

---

*[1987 ஜூன் மாதம் 02 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*1987 யாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.80      தபாற் செலவு : ரூபா 1.15

# 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஆட்களுக்கு புனர்வாழ்வு அளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபைச் சட்டம்

[1987 ஜூன் மாதம் 02 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ட. ஓ—70/83

**குறித்தசில ஆட்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதிலும் குறித்தசில ஆதனங்கள், கைத்தொழில்கள், தொழில்கள் என்பனவற்றைப் பழுதுபார்ப்பதிலும், மீளப்புதுப்பிப்பதிலும், புனரமைப்பதிலும் உதவிசெய்வதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும், புனரமைத்தல் அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறாக (இதனகத்துப்பின்னர் " நியமித்த தேதி " எனக் குறிப்பிடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபையைத் தாபித்தல்.**

2. (1) ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தல், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபை என அழைக்கப்படுவதும், இதனகத்துப்பின்னர் (ஆ. பு. ஆ. கை. பு. அ) எனக் குறிப்பிடு செய்யப்படுவதுமான குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது இச்சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் இடையறுவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம்; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

**ஆ. பு. ஆ. கை. பு. அ. வின் பணிப்பாளர் சபை.**

3. (1) ஆ. பு. ஆ. கை. பு. அ ஆனது அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஐந்து பணிப்பாளர்களைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் சபையானது ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் என்பவற்றைக் காலத்திற்குக்காலம் அமைச்சர் வழங்கக்கூடியனவான அத்தகைய சிறப்பான அல்லது பொதுவான பணிப்புகளுக்கு அமைவாகப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும். அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றுக்கும் இணங்கியொழுகுவது, பணிப்பாளர் சபையின் கடமையாதல் வேண்டும்.

(3) அமைச்சரானவர் பணிப்பாளர்களுள் ஒருவரை ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(4) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணிப்பாளர் சபையினது பதவிக் காலங்கள், ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணிப்பாளர்களுக்குக் கொடுபடற்பாலதான ஊதியம், ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் கூட்டங்கள் அத்துடன் இலச்சினை என்பன தொடர்பாக இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்.

2—எ 096687—2,820 (87/04)

ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணிகள்

4. ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) பாதிக்கப்பட்ட ஆட்களுக்குப் பூரண மானியக்கொடைவாயிலாகவோ அல்லது ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எவையேனும் வழிவகைகளிலோ அவர்களின் புனர்வாழ்வுக்கு உதவிசெய்தல் ;

(ஆ) பாதிக்கப்பட்ட ஆதனம் எதனதும் சொந்தக்காரருக்கு, அத்தகைய ஆதனத்தைப் பழுதுபார்ப்பதற்கும் அத்துடன் மீளப் புதுப்பிப்பதற்கும், ஒன்றில் பூரண மானியக்கொடைவாயிலாகவோ அல்லது அத்தகைய பழுதுபார்க்கும் அத்துடன் மீளப் புதுப்பிக்கும் நோக்கத்திற்கு நிதியத்திலிருந்து உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை மீளக்கொடுப்பனவு செய்வதனை உறுதிப்படுத்துவதற்காக ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதனாலும், அத்தகைய சொந்தக்காரரினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நியாயமான நிபந்தனைகளுக்கமைவாகவோ உதவியளித்தல் ;

(இ) சேதப்படுத்தப்பட்ட ஆதனமாகவுள்ள பாதிக்கப்பட்ட ஆதனம் எதனதும் வாடகைக் குடியிருப்பாளருக்கு, அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரர், அத்தகைய ஆதனத்தைப் பழுதுபார்ப்பதற்கும், மீளப்புதுப்பிப்பதற்கும் இயலாதவராக அல்லது விருப்பமில்லாதவராக இருந்தால், அத்துடன் ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, அவசியமான பழுதுபார்த்தல்களையும் மீளப்புதுப்பித்தல்களையும் செய்து முடிப்பதற்கு அத்தகைய வாடகைக் குடியிருப்பாளருக்கு அதிகாரமளிப்பது நீதியானதும் ஒப்புரவானதும் எனத் திருப்திப்பட்டால் அத்தகைய ஆதனத்தைப் பழுதுபார்ப்பதற்கும், மீளப்புதுப்பிப்பதற்கும் உதவியளித்தல் ;

(ஈ) கட்டிடமொன்றை அல்லது கட்டமைப்பொன்றை கொண்டதான பாதிக்கப்பட்ட ஆதனம் எதனையும் இடித்தழித்து, அத்துடன் அகற்றுமாறு கட்டளையிடுதல் ; அத்துடன்

(உ) பாதிக்கப்பட்ட கைத்தொழில் அல்லது தொழிலெதனதும் உரிமையாளருக்கு அத்தகைய கைத்தொழிலை அல்லது தொழிலைப் புனரமைப்பதற்கு, அத்தகைய புனரமைப்புக்கு நிதியத்திலிருந்து உறப்படும் ஏதேனும் செலவினத்தை மீளக்கொடுப்பனவு செய்வதனை உறுதிப்படுத்துவதற்காக ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதனாலும் அத்தகைய உரிமையாளரினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நியாயமான நிபந்தனைகளுக்கமைவாக உதவியளித்தல்.

ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் தத்துவங்கள்.

5. ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, பின்வரும் எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம்.—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எம்முறையிலேனும் கொள்ளல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) இருபத்திரண்டாம் பிரிவின் கீழான தீர்மானமொன்றின் பயனைக் கொண்டு அரசுக்கு உரித்தாக்கப்பட்டதான அல்லது 23 ஆம் பிரிவின் கீழ் அரசுக்கு மீள உரித்தாக்கப்பட்டதான பாதிக்கப்பட்ட ஆதனத்தைத் துப்புரவாக்கி அத்துடன் மீள அபிவிருத்தி செய்தல் ;

(இ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளவும் அத்துடன் புரிதலும் ;

(ஈ) காசாகவாயினுஞ்சரி, வேறுவகையாகவாயினுஞ்சரி கொடைகள், மானியக்கொடைகள், நன்கொடைகள் அல்லது மானியங்கள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளல்; அத்துடன் அதன் பணிகளை நிறைவேற்றுகையில் அவற்றைப் பிரயோகித்தல் ;

(உ) அதன் பணிகளை நிறைவேற்றுவதன் இடைநேர் விளைவானவையான அல்லது அதன் விளைவார்ந்தன்மையினவான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.

6. (1) தவிசாளர் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

(2) ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் இச்சட்டத்தை நிருவகிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களையும் முகவர்களையும் அத்துடன் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(3) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய விதங்களிலும் அதன் அலுவலர்கள் முகவர்கள், சேவையாளர்கள் என்போருக்கு ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்கள் அத்தகைய சேவைநிபந்தனைகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

(4) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அந்த அலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்தோடு அதுபோன்ற சம்மதத்

தோடு ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதனுல் தீர்மானிக்கப்படக்கூடிய வாறுன அத்தகைய காலப்பகுதிக்கு ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படு கின்றவிடத்து 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(6) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்ற விடத்து 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவ ருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(7) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு, அரசாங்கத்துக் குச் சேவைசெய்வதற்கு உடன்பட்டுள்ளவரான ஆளெவரையும் ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது தொழிலுக்கமர்த்துமிடத்து அந்த ஆளினுல் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதுடனுன ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத் தகைய உடன்படிக்கைக்கான கடப்பாடுகளே நிறைவேற்றும் நோக்கத்திற் காக அரசாங்கத்திற்குப் புரியப்பட்ட சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் வேண்டுகோளின்பேரில் உள்ளூ ராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூ ரதிகாரசபையொன்றின் வேறெவரேனும் உறுப்பினர் அல்லது சேவை யாளர், விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய உறுப்பினரதும் அலுவலரதும் அல்லது சேவையாளரதும் சம்மதத்தோடும், அத்துடன் உள்ளூராட்சி ஆணைக்குழுவினது அல்லது உள்ளூரதிகாரசபையினது அல்லது அபி விருத்திச்சபையொன்றினது சம்மதத்தோடும், ஆ. பு. ஆ. கை. பு. அ. ஒன்றினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய காலப்பகுதிக்கு அந்த ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணியாட்டொகுதிக்குத் தற்கா லிகமாக நியமிக்கப்படலாம், அல்லது விடயத்திற்கேற்றவாறு அதே போன்ற சம்மதத்துடன் ஆ. பு. ஆ. கை. பு. அ. ஒன்றும் உள்ளூராட்சி ஆணைக்குழுவும் அல்லது உள்ளூரதிகாரசபையும் அல்லது அபிவிருத்திச் சபையும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறுன ஓய்வூதிய உரிமைகள் அல் லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட்ட அத்தகைய நியதிகள் நிபந்தனைகள்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தர மாக நியமிக்கப்படலாம்.

7. (1) பாதிக்கப்பட்ட ஆட்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும் பாதிக்கப்பட்ட ஆதனங்களைப் பழுதுபார்ப்பதற்கும், மீளப் புதுப்பிப்ப தற்கும், புனரமைப்பதற்குமென (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதியமொன்று இருத்தல் வேண்டும். ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் நிதியம்.

(2) பின்வருவன நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்—

(அ) நியமித்த தேதியன்று—

(i) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அவசரகால (பாதிக்கப்பட்ட ஆதனங்கள் கைத்தொழில்கள், அல்லது தொழில்களைப் புனரமைத்தல்) ஒழுங்குவிதியினால் தாபிக்கப்பட்ட ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் நிதியத்தினதும்;

(ii) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகளின்கீழ் நியமிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியினதும்,

வரவில் இருக்கின்றனவான அத்தகைய எல்லா மீதிகளும்;

(ஆ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக காலத்திற்குக் காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) இலங்கையிலாயினுஞ்சரி, இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி, எத்தன்மைத்தான எம் மூலத்திலிருந்தேனும் நன்கொடைகள், மானியக்கொடைகள் அல்லது கொடைகள் என்றவகையாக நிதியத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தை நிருவகிப்பதிலும் செயற்படுத்துவதிலும் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமென இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்வேண்டும்.

8. (1) ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றியனவும், அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றியனவுமான தகுந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும். ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் கணக்குகளின் கணக்காய்வு.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் கணக்குக்களின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3—ஏ 096687 (87/04)

பாதிக்கப்பட்ட ஆதனத்தைக் கையேற்றல்.

9. ஆ· பு· ஆ· கை. பு. அ. என்பதனல் அதற்கென அதிகாரமளிக்கப்பட்டவரான ஆளெவரும் இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழான தீர்மானமொன்றின் பயனைக்கொண்டு அரசுக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது இச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின்கீழ் அரசுக்கு மீள உரித்தாக்கப்பட்ட பாதிக்கப்பட்ட ஆதனம், தொழில் அல்லது கைத்தொழில் எதனையும் தனது உடைமையில் எடுத்துக்கொள்ளலாம்.

பாதிக்கப்பட்ட ஆதனத்துள் அதிகாரமளிக்கப்படாது நுழைதல்.

10. (1) எந்த ஆள், சட்டமுறையான அதிகாரமின்றி (அதற்கான எண்பிப்பு அத்தகைய ஆள் மேலாதல் வேண்டும்) இயைபான தேதியன்று அல்லது அத்தேதிக்குப்பின்னர் பாதிக்கப்பட்ட ஆதனமெதனுள்ளும் நுழைகின்ருரோ அல்லது இருப்பாட்சி கொள்ளுகின்ருரோ அந்த ஆளெவரும் இச்சட்டத்தின்கீழான தவருென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், யூரர் சபையில்லாது அமரும் மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் முன்னரான விளக்கத்தின்பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரானவர், எவரேனும் ஆள் பாதிக்கப்பட்ட ஆதனமெதிலும் அதிகாரமளிக்கப்படாது இருப்பாட்சி கொள்ளுகிருரென அல்லது 11 ஆம் பிரிவின்கீழ் எந்த வாடகைக் குடியிருப்பாளருடைய உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றனவோ, அந்த வாடகைக் குடியிருப்பாளரெவரும், பாதிக்கப்பட்ட ஆதனமெதனுள்ளும் நுழைவதற்கு அல்லது அதனைத் தொடர்ந்து இருப்பாட்சி கொள்ளுவதற்கு அனுமதிக்கப்படவில்லை எனத் திருப்திப்படுகின்றவிடத்து, பொலிசுப் பரிசோதகர் ஒருவரின் பதவி வரிசைக்குக் குறையாதவரான பொலிசு அலுவலர் ஒருவரைப் பின்வருமாறு செய்யும்படி எழுத்தில் பணிக்கலாம் :—

(அ) பாதிக்கப்பட்ட ஆதனமெதனையும் எவரேனும் ஆள் அதிகாரமளிக்கப்படாது உடைமை கொண்டிருக்கின்ற ஏதேனும் விடயத்தில் அத்தகைய ஆளை வெளியேற்றும்படியும் அத்தகைய ஆதனத்தில் இருப்பாட்சி கொள்ளுவதற்கு உரித்துடையவராகவிருக்கும் ஆளை அதன் இருப்பாட்சியில் அமர்த்தும்படியும்;

(ஆ) ஏதேனும் பாதிக்கப்பட்ட ஆதனத்தின் எந்த வாடகைக் குடியிருப்பாளருடைய உரிமைகள் 11 ஆம் பிரிவின்கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளனவோ அந்த வாடகைக் குடியிருப்பாளரொருவர் அத்தகைய ஆதனத்திற்குள் நுழைவதற்கு அல்லது அதில் இருப்பாட்சி கொள்வதற்கு அனுமதிக்கப்படாத ஏதேனும் விடயத்தில் அத்தகைய வாடகைக் குடியிருப்பாளருக்கு உடைமையை மீளப் பெற்றுக்கொடுக்கும்படியும் அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றுக்கும் இணங்கியொழுகுவது அத்தகைய பொலிசு அலுவலர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் தமக்கு வழங்கப்பட்ட பணிப்பொன்றைப் பின்பற்றிச் செயலாற்றும் பொலிசு அலுவலரொருவர் ஏதேனும் பாதிக்கப்பட்ட ஆதனத்தில் அதிகாரமளிக்கப்படாது இருப்பாட்சி கொள்ளுகின்றவரான ஆளெவரையும் வெளியேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பலாத்காரத்தைப் பயன்படுத்தலாமென்பதுடன் அந்த நோக்கத்திற்காக ஆயுதந்தாங்கிய படையினரின் உதவிகளைப் பெறுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பாதிக்கப்பட்ட ஆதனம் எதிலிருந்தும் வெளியேற்றப்பட்டவரும் அந்த ஆதனத்தில் இருப்பாட்சி கொள்ளுதற்கு உரித்துடையவரென உரிமை கோருகின்றவருமான எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஆதனத்தில் அல்லது ஆதனத்தின் மீது அவருக்கு உரிமைகள் எவையேனுமிருப்பின், அவற்றை வலியுறுத்துவதற்காக ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கான உரிமைகளைப் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது. அத்தகைய ஏதேனும் வழக்கு நடவடிக்கை அத்தகைய வெளியேற்றுகையிலிருந்து இரண்டு மாதங்களினுள் தொடுக்கப்படுதல் வேண்டும்.

11. (1) (இப்பிரிவின் "வாடகைச் சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டம் எந்த வளவுகளுக்கு ஏற்புடையதாகின்றதோ, அந்த வளவுகளுக்கு ஏதேனும் பாதிக்கப்பட்ட ஆதனம் கொண்டிருக்கின்றவிடத்து அப்போது—

பாதிக்கப்பட்ட ஆதனங்களில் அல்லது அவற்றின் மீது வாடகைக் குடியிருப்பாளர்களுக்குள்ள உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள்.

(அ) இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று அத்தகைய வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளராகவிருந்தவரான எவரேனும் ஆள், அத்தகைய வளவுகளுக்குள் நுழைவதற்கும் அத்துடன் அவற்றில் இருப்பாட்சி கொள்ளுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வளவுகளுள் நுழைவதற்கும் அவற்றில் இருப்பாட்சி கொள்ளுவதற்கும் அத்தகைய வாடகை குடியிருப்பாளரை அனுமதிப்பது, காணிச் சொந்தக்காரரின் கடமையாதலும் வேண்டும் ;

(ஆ) இயைபான தேதியன்று தொடங்குவதும், 1984 யூலை 31 ஆம் தேதியன்று அல்லது அத்தகைய வளவுகள் பழுதுபார்க்கப்படும் அல்லது மீளப் புதுப்பிக்கப்படும் தேதியன்று, இவற்றுள் எது முந்தியதோ அன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கு அத்தகைய வளவுகள் தொடர்பாக அத்தகைய ஆள் வாடகையை நிலுவையாக வைத்திருக்கவில்லை எனக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இயைபான தேதியன்று தொடங்குவதும் 1984 யூலை 31 ஆம் தேதியன்று முடிவடைவதுமான அல்லது அத்தகைய வளவுகள் பழுதுபார்க்கப்படும் அல்லது மீளப்புதுப்பிக்கப்படும் தேதியன்று, இவற்றுள் எது முந்தியதோ அன்று முடிவடைவதுமான காலப்பகுதி தொடர்பாக வாடகைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய வளவுகளிலிருந்து அத்தகைய வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கு வழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது ;

(ஈ) அத்தகைய வளவுகளின் காணிச் சொந்தக்காரர் நிதியத்திலிருந்து பூரண மானியக் கொடையொன்ருகக் கிடைக்கப்பெற்ற ஏதேனும் பணத்தைக் கொண்டல்லாது வேறு வகையில், தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்டவாருன அல்லது ஏற்றுக்கொள்ளப் பட்டவாருன அத்தகைய தொகையினதான செலவினத்தை உற்று அத்தகைய வளவுகளைப் பழுதுபார்க்குமிடத்து அல்லது மீளப்புதுப்பிக்குமிடத்து அத்தகைய பழுதுபார்த்தல் அல்லது மீளப்புதுப்பித்தல் தகுந்தவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற பயன்பட தவிசாளர் சான்றிதழொன்றை வழங்கினல் அத்தகைய வளவுகளின் நியம வாடகையானது ஒவ்வோராண்டும் தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகையின் பன்னிரண்டு சதவீதத்தால் பத்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அதிகரிக்கப்படலாம். அத்தகைய அதிகரிப்பு ஒவ்வொன்றும் வாடகைச் சட்டத்தின் நோக்கத்திற்கென அனுமதிக்கப்பட்ட அதிகரிப்பொன்ருகக் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) காணிச் சொந்தக்காரர் அத்தகைய வளவுகளுக்கான பழுதுபார்த்தலை நிறைவேற்றுவதற்கு அல்லது அத்தகைய வளவுகளை மீளப் புதுப்பிப்பதற்கு மறுக்கின்றவிடத்து, அத்தகைய வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளர் நிதியத்திலிருந்து பூரண மானியக் கொடையொன்ருக கிடைக்கப்பெற்ற பணத்தைக் கொண்டல்லாது வேறு வகையில், தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்டவாருன அத்தகைய தொகையினதான செலவினத்தை உற்று அத்தகைய வளவுகளைப் பழுதுப்பார்க்குமிடத்தும் அல்லது மீளப் புதுப்பிக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய பழுதுபார்த்தல் அல்லது மீளப்புதுப்பித்தல் தகுந்தவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதென தவிசாளர் சான்றிதழொன்றை வழங்குமிடத்தும் வாடகைக் குடியிருப்பாளர், தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட தொகையை, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கவனத்திற் கொண்டு நீதியானதும் ஒப்புரவானதும் எனத் தவிசாளருக்குத் தோன்றக் கூடியவாருன அத்தகைய தவணைப்பணங்களில், அத்தகைய வளவுகள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வாடகைக்கெதிராக எதிரீடு செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின், வாடகைக் குடியிருப்பாளர் அத்தகைய வளவுகளை பழுதுபார்ப்பதற்கு அல்லது மீளப்புதுப்பிப்பதற்கு உடன்படும் அத்துடன் பாதிக்கப்பட்ட ஆதனத்தின் பழுதுபார்த்தல்கள் அல்லது மீளப்புதுப்பித்தல் அத்தகைய வாடகைக் குடியிருப்பாளரால் அவரது செலவில் நிறைவேற்றப்படும் என பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளை சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அவசரகால பாதிக்கப்பட்ட ஆதனங்களையும் தொழில்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் ஒழுங்குவிதிகளினுல் தாபிக்

கப்பட்ட ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதற்கு உறுதிப்பாடொன்றை அளித்திருக்குமிடத்து, வாடகைக் குடியிருப்பாளர் இப்பந்தியின் கீழான ஏதேனும் நிவாரணத்திற்கு உரிமைகோருதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

(2) பாதிக்கப்பட்ட ஏதேனும் ஆதனம், எந்த வளவுகளுக்கு வாடகைச் சட்டம் ஏற்புடையதாக மாட்டாதோ அந்த வளவுகளைக் கொண்டதாக விருக்குமிடத்து அப்போது இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளில் அத்தகைய வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளராக இருந்த ஆளெவரும், இயைபான தேதியன்று தொடங்குவதும் அத்தகைய வளவுகள் பழுதுபார்க்கப்பட்ட அல்லது மீளப்புதுப்பிக்கப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதி தொடர்பில் வாடகையை நிலுவையாக வைத்திருந்தலில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) எவையேனும் வளவுகளின் நியம வாடகை அத்தகைய வளவுகளுக்குச் செய்யப்பட்ட எவையேனும் பழுதுபார்த்தல்களின் அல்லது மீளப்புதுப்பித்தலின் காரணமாக (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அதிகரிக்கப்படுமிடத்து, அத்தகைய வளவுகளின் காணிச் சொந்தக்காரர் அத்தகைய அதே பழுதுபார்த்தல்கள் அல்லது மீளப்புதுப்பித்தல் தொடர்பில் வாடகைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் வாடகை அதிகரிப்பொன்றுக்கு விண்ணப்பிக்க உரித்துடையவராதல் ஆகாது.

(4) ஐயப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக எந்த வளவுகளின் நியம வாடகை (அது 4 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படும்) இயைபான தேதியன்று மாதமொன்றுக்கு நூறு ரூபாவுக்குக் குறைந்ததாக இருந்ததோ, அந்த எவையேனும் வளவுகளின் நியம வாடகை (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட அதிகரிப்பொன்றின் காரணமாக மாதமொன்றுக்கு நூறு ரூபாவை விஞ்சுகின்ற தொகையொன்றுக்கு அதிகரித்துள்ளவிடத்து, அத்தகைய வளவுகளின் காணிச் சொந்தக்காரர் வாடகைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் எதுவின்மீது அவற்றின் வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கான ஏதேனும் வழக்கை அல்லது வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு உரித்துடையவராதல் ஆகாது என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்கென—

(அ) எவையேனும் வளவுகள் குறிப்பிட்ட ஒரு தேதியில் பழுதுபார்க்கப்பட்டன அல்லது மீளப்புதுப்பிக்கப்பட்டன எனத் தவிசாளரினால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழொன்று அத்தகைய வளவுகள் அத் தேதியில் பழுதுபார்க்கப்பட்டன அல்லது மீளப்புதுப்பிக்கப்பட்டன என்பதற்கு முதற்றோற்ற எண்பிப்பாதல் வேண்டும்.

இயைபான தேதிக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட ஆதனத்தை விற்பனை செய்தல் தொடர்பான நடவடிக்கைகள்.

12. (1) பாதிக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை இயைபான தேதிக்குப் பின்னர் ஆனால் 1983 டிசம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னர் விற்பனை செய்த ஆளெவரும் அத்தகைய விற்பனையை நீக்குவதற்கு அல்லது அத்தகைய ஆதனம் விற்கப்பட்ட விலைக்கும் அத்தகைய ஆதனத்தின் சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் ஏதுமிருப்பின் அதனை அறவிடுவதற்கென கட்டளையொன்றுக்கு நியமித்த தேதிக்குப் பின்னர் 2 மாதங்களைக்கொண்டவொரு காலப்பகுதிக்குள் அத்தகைய ஆதனம் அமைந்துள்ள இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் வழக்கெதுவும் தொடுக்கப்படுமிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய வழக்கு எந்த ஆதனம் தொடர்பில் தொடுக்கப்பட்டதோ அந்த ஆதனம், அத்தகைய ஆதனத்தின் சந்தைப் பெறுமதியைவிடக் குறைந்த விலையொன்றுக்கே விற்கப்பட்டது என அது திருப்திப்படுமானால், அத்தகைய விற்பனையை நீக்கஞ்செய்து அத்தகைய ஆதனத்தின் உடைமையை, இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று அதனை உடைமைகொண்டிருந்த ஆளுக்கு மீளப்பெற்றுக்கொடுக்கும் அல்லது விற்பனை விலைக்கும் சந்தை விலைக்கும் இடையிலான வித்தியாசத்தின் கொடுப்பனவைத் தேவைப்படுத்தும் கட்டளையை ஆக்கலாம். நீதிமன்றம் விற்பனையொன்றை நீக்கஞ்செய்து கட்டளையொன்றை ஆக்குமிடத்து அது விற்பனை விலையின் மீள் கொடுப்பனவுக்கும் கட்டளையிட வேண்டும்.

(3) தவிசாளரின் கைப்பட்ட சான்றிதழொன்றில் குறித்துரைக்கப்பட்ட அசைவற்ற ஆதனம் பாதிக்கப்பட்ட ஆதனமாகும் அல்லது பாதிக்கப்பட்ட ஆதனமல்ல என்ற பொருள்பட்ட அத்தகைய சான்றிதழ் 10 ஆம் பிரிவின்கீழ் அல்லது இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தொடுக்கப்படும் எவையேனும் சட்ட நடவடிக்கைகளில் சான்றாக ஏல் தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்ற எண்பிப்பாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவில் "சந்தைப் பெறுமதி" என்பது பாதிக்கப்பட்ட ஏதேனும் ஆதனம் தொடர்பாக நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி அத்தகைய ஆதனத்தை இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்றுஇருந்த அதன் நிலைக்கு மீளவமைப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தொகையைக் கழித்து இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று திறந்த சந்தையில் விற்கப்பட்டிருந்தால் அத்தகைய ஆதனத்திற்குக் கிடைத்திருக்கும் விலை என்று பொருள்படும்.

தகவல் கோருவதற்குத் தவிசாளருக்குள்ள தத்துவம்.

13. (1) தவிசாளர் தமது தத்துவங்களைத் தகுந்த முறையில் பிரயோகிப்பதற்கு அல்லது தமது பணிகளைத் தகுந்தமுறையில் புரிவதற்கு அவசியம் எனக் கொள்ளக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் தகவலைக் கொடுக்குதவுமாறு அல்லது அத்தகைய ஏதேனும் புத்தகத்தை, இடாப்பை அல்லது ஆவணத்தைக் காண்பிக்குமாறு எழுத்திலான அறிவித்தல் ஒன்றின்மூலம் ஆளெவரையும் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெறும் ஆளெவரும், அத்தகைய தக

விலைக் கொடுத்துதவுவதிலிருந்து அல்லது அத்தகைய புத்தகத்தை, இடாப்பை அல்லது ஆவணத்தைக் காண்பிப்பதிலிருந்து எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளினால் தடைசெய்யப்பட்டாலன்றி, அத்தகைய அறிவித்தலின் நியதிகளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலின் நியதிகளுக்கு இணங்கியொழுகுகையில் கொடுத்துதவப்பட்ட தகவல் எதுவும் அல்லது காண்பிக்கப்பட்ட ஒரு புத்தகத்தின், இடாப்பின் அல்லது ஆவணத்தின் உள்ளீடுகள் எவையும், விடயத்திற்கேற்ப அத்தகைய தகவலைக் கொடுத்துதவுகின்ற அல்லது அத்தகைய புத்தகத்தை, இடாப்பை அல்லது ஆவணத்தைக் காண்பிக்கின்ற ஆளின் சம்மதத்துடன் தவிர, அல்லது இச்சட்டத்தின் தவிசாளர் தமது பணிகளை நிறைவேற்றுகின்ற நெறியின்போது தவிர, தவிசாளரால் வெளியிடப்படுதலோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்குத் தெரிவிக்கப்படுதலோ ஆகாது.

14. (1) கட்டிடமொன்றை அல்லது அதன் பாகமொன்றைக் கொண்டதான பாதிக்கப்பட்ட ஆதனம் எதுவும்— பாதிக்கப்பட்ட கட்டிடத்தை இடித்தழித்தல்.

(அ) அது எரிந்திருப்பதன் காரணமாக அல்லது வேறு வகையில் சேதமடைந்திருப்பதன் காரணமாக வசிப்பதற்கு உகந்ததல்லாததாக ; அல்லது

(ஆ) பழுதுபார்க்கப்படாத ஒரு நிலையில் இருப்பின், தவிசாளர், அத்தகைய கட்டிடத்தை இடித்தழிக்குமாறும் அத்துடன் அவரது பணிப்பில் குறித்துரைக்கப்படும் காலப்பகுதியொன்றினுள் எல்லாச் சிதைவுகளையும் அப்புறப்படுத்துமாறும் அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரரை எழுத்தில் பணிக்கலாம்.

(2) ஆளெவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் பணிப்பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, தவிசாளர் அத்தகைய கட்டிடத்தை இடித்தழிப்பிக்கலாம்.

(3) ஏதேனும் கட்டிடம் அல்லது அதன் பாகம் (2) ஆம் உட்பிரிவின் கீழ் இடித்தழிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய இடித்தழிப்பிலிருந்து விளையும் பொருளை விற்பனை செய்தலும், அத்தகைய விற்பனையின் விற்றுவரவுகளை இடித்தழித்தலிலும் அப்புறப்படுத்துதலிலும் உறப்பட்ட செலவுகளின் கொடுப்பனவிற்குப் பிரயோகித்தலும் அத்துடன் மிகை ஏதுமிருப்பின் அதனை அத்தகைய கட்டிடத்தின் சொந்தக்காரருக்குச் செலுத்துதலும் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதற்குச் சட்டமுறையாதல் வேண்டும்.

15. (1) ஆளெவரும் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதனால் அவர் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலன்றி, பாதிக்கப்பட்ட எந்த ஆதனத்திற்கு இப்பிரிவு ஏற்புடையதாகின்றதோ பாதிக்கப்பட்ட அந்த ஆதனம் எதனுள்ளும் நுழைதலோ அல்லது அதில் இருப்பாட்சிகொள்ளுதலோ ஆகாது. பாதிக்கப்பட்ட ஆதனத்தில் இருப்பாட்சி கொள்ளுதலும் அதனைப் பழுதுபார்த்தலும்.

(2) ஆளெவரும்—

(அ) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதனால் அவர் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டும்; அத்துடன்

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ், மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ், நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரத்தைப் பெற்றும்

இருந்தாலன்றி, இப்பிரிவு பாதிக்கப்பட்ட எந்த ஆதனத்திற்கு ஏற்புடையதோ, பாதிக்கப்பட்ட அந்த ஏதேனும் ஆதனத்தைப் பழுதுபார்த்தலோ, மீளப் புதுப்பித்தலோ, மீளவமைத்தலோ அல்லது இடித்தழித்தலோ ஆகாது.

(3) இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட தீர்மானமொன்றின் பயனைக்கொண்டு அரசுக்குரித்தாக்கப்பட்ட அல்லது இச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் அரசுக்கு மீள உரித்தாக்கப்பட்ட பாதிக்கப்பட்ட ஆதனத்துக்கு இப்பிரிவு ஏற்புடையதாகும்.

1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம், ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதற்கு ஏற்புடையதாதல்.

16. (1) ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது—

(அ) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக அரசாங்க நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணிகளையொத்த பணிகளைப் புரிகின்ற அரசாங்கத் திணைக்களமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) நிதியானது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக இலங்கை அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) நிதியத்திற்கு அளிக்கப்படும் கொடை ஒவ்வொன்றும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டதொரு கொடையாகக் கருதப்படுதல் வேண்டும்.

பணிப்பாளர்களும் அலுவலர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

17. தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் எல்லாப் பணிப்பாளர்களும், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

18. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது அட்டவணைப்படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப்பட வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். இலஞ்சச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட ஆ. பு.ஆ.கை.பு.அ. ஆனது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

19. (1) ஆ. பு. ஆ. கை. பு. அ். என்பதன் செயலாளருக்கு, தவிசாளருக்கு பணிப்பாளருக்கு, அல்லது எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக இச்சட்டத்தின்கீழ் அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எச்செயல் தொடர்பிலும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலோ அல்லது பேணப்படுதலோ ஆகாது. வழக்குக்கான பாதுகாப்பு.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட, அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில், அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென அல்லது செய்யாதுவிடப்பட்டதென நீதிமன்றம் கருதினால், அத்தகைய வழக்கு நடவடிக்கையில், அத்தகைய செலவு அவரினால் அறவிடப்பட்டாலொழிய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

20. (அ) ஆ. பு. ஆ. கை. பு. அ, என்பதனால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுக மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது தவறுகள்.

(ஆ) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதனால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு, பொலிசு அலுவலரொருவருக்கு அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவருக்கு 9 ஆம் பிரிவினால் அல்லது 10 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களை அத்தகைய ஆள், அலுவலர், அல்லது உறுப்பினர் பிரயோகிக்கையில், அத்தகைய ஆளை அலுவலரை அல்லது உறுப்பினரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற

ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர், வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தாலன்றி, பத்தாயிரம்

ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆட்கள் குழுக்களால் புரியப்படும் தவறுகள்.

21. இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவினால் புரியப்படுகின்றவிடத்து—

(அ) அக்குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரொவ்வொருவரும் அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அக்குழு குழுமமொன்றாயின், அக்குழுமத்தின் பங்காளரொவ்வொருவரும், அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பணிப்பாளர் அல்லது பங்காளர் எவரும் தமது அறிவுக்கெட்டாமல் அத்தவறு புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தார் என எண்பிப்பாராயின், அப்பணிப்பாளர் அல்லது பங்காளர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

அவசரகால ஒழுங்கு விதிகளின் பயனைக் கொண்டு அரசுக்கு உரித்தாக்கப்பட்ட பாதிக்கப்பட்ட ஆதனம், தொழில் அல்லது கைத்தொழில் என்பவற்றின் உரிமைதுறத்தல்.

22. (1) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அவசரகால (பாதிக்கப்பட்ட ஆதனத்தை தொழிலை அல்லது கைத்தொழிலைப் புனரமைத்தல்) ஒழுங்குவிதிகளின் பயனைக்கொண்டு அரசுக்கு உரித்தாக்கப்பட்ட பாதிக்கப்பட்ட ஆதனம், தொழில், அல்லது கைத்தொழில் ஒவ்வொன்றும், எழுத்தில் தவிசாளரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக—

(அ) (i) எந்தப் பாதிக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் பழுதுபார்த்தல் அல்லது மீளப் புதுபித்தல் தொடங்கப்படவில்லையோ அந்த ஆதனமாக இருக்கும்;

(ii) எந்தப் பாதிக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் பழுதுபார்த்தல்கள் அல்லது மீளப்புதுப்பித்தல் தொடங்கப்பட்டு, ஆனால் பூர்த்தியாக்கப்படவில்லையோ அந்தப் பாதிக்கப்பட்ட ஆதனமாக இருக்கும்;

(iii) எந்தப் பாதிக்கப்பட்ட ஆதனத்தின் வாடகைக் குடியிருப்பாளருக்கு உடைமை மீளப்பெற்றுக்கொடுக்கப்படவில்லையோ அந்தப் பாதிக்கப்பட்ட ஆதனமாக இருக்கும்;

(iv) எந்தப் பாதிக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் நியமித்த தேதியன்று விசாரணை முடிவுறாதிருக்கின்றதோ அந்த ஆதனம் தொடர்பில்; அல்லது, அத்துடன்

(ஆ) (i) எந்தப் பாதிக்கப்பட்ட தொழில் அல்லது கைத்தொழில் தொடர்பில் புனரமைப்பு அல்லது மீளப்புதுப்பித்தல் தொடங்கப்படவில்லையோ அந்தத் தொழிலாக அல்லது கைத்தொழிலாகவிருக்கும்; அல்லது

(ii) எந்தப் பாதிக்கப்பட்ட தொழில் அல்லது கைத்தொழில் தொடர்பில் புனரமைப்பு அல்லது மீளப்புதுப்பித்தலானது தொடங்கப்பட்டு ஆனால் பூர்த்தியாக்கப்படவில்லையோ அந்தப் பாதிக்கப்பட்ட தொழிலாக அல்லது கைத்தொழிலாக இருக்கும் ;

(iii) எந்தப் பாதிக்கப்பட்ட தொழிலின் அல்லது கைத்தொழிலின் வாடகைக் குடியிருப்பாளர் உடைமையை மீளப்பெற வில்லையோ அந்தத்தொழிலாக அல்லது கைத்தொழிலாக இருக்கும்,

(iv) எந்தப் பாதிக்கப்பட்ட தொழில் அல்லது கைத்தொழில் தொடர்பில் நியமித்த தேதியன்று விசாரணையொன்று முடிவுறுதிருக்கின்றதோ அந்தத் தொழிலாக அல்லது கைத் தொழிலாக இருக்கும்,

அத்தகைய ஏதேனும் பாதிக்கப்பட்ட ஆதனம், தொழில் அல்லது கைத் தொழில் தவிர, நியமித்த தேதியிலிருந்து உரிமை துறக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தவிசாளரானவர்,—

(அ) அத்தகைய ஆதனத்திற்கான பழுதுபார்த்தல்கள் அல்லது மீளப் புதுப்பித்தல் பூர்த்தியாகப்பட்டுள்ளனவென அல்லது பூர்த்தி யாக்கப்பட்டுள்ளதென அல்லது அத்தகைய ஆதனத்தின் சட்ட முறையான வாடகைக் குடியிருப்பாளருக்கு உடைமை மீளப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதென ; அல்லது

(ஆ) அத்தகைய தொழிலின் அல்லது கைத்தொழிலின் புனரமைப்பு அல்லது மீளப்புதுப்பித்தலானது தொடங்கப்பட்டுள்ளதென அல்லது பூர்த்தியாக்கப்பட்டுள்ளனவென, அல்லது பூர்த்தியாக் கப்பட்டுள்ளதென,

திருப்திப்படுமிடத்து. (1) ஆம் உட்பிரிவின்கீழ் விலக்கப்பட்டவாறான அத்தகைய ஆதனம், தொழில் அல்லது கைத்தொழில் எதனையும் எந்த நேரத்திலும் எழுத்திலான வெளிப்படுத்துகைமூலம் உரிமைதுறப்பதற்கு அவர் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகை ஒவ்வொன்றும் முற்றானதும் இறுதியானதுமாதலும் வேண்டும் ; அத்துடன் ஏதேனும் நீதிமன்றத்தில் அது கேள்விக்குட்படுத் தப்படுதலுமாகாது.

(3) ஓராம் உட்பிரிவினது நடைமுறையின் பயனைக்கொண்டு, அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ், பாதிக்கப்பட்ட ஆதனம், தொழில் அல்லது கைத்தொழில் எதுவும் உரிமைதுறக்கப்படுவதன்மீது, அத்தகைய ஆதனம், தொழில் அல்லது கைத்தொழில் அரசுக்கு எப்போதாயினும் உரித் தாக்கப்படவில்லை எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம், தொழில் அல்லது கைத்தொழில் என்பனவற்றில் அல்லது அவற் றின்மீதான ஏதேனும் உரிமை, உரித்து அல்லது அக்கறைபற்றி எழக் கூடிய வினா எதுவும் அதற்கிணங்கத் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எந்தத் தேதியன்று அத்தகைய ஆதனம், தொழில் அல்லது கைத்தொழில் அரசுக்கு உரித் தாக்கப்பட்டதோ அந்தத் தேதியன்று உள்ளதான அத்தகைய ஆதனத்

திலான, தொழிலிலான அல்லது கைத்தொழிலிலான அல்லது அவற்றின் மீதான ஒழுங்கு, உடன்படிக்கை அல்லது நொத்தாரிசு மூலமாக எழுதி நிறைவேற்றப்பட்ட வேறு சாதனம் ஒவ்வொன்றும் அந்த உட்பிரிவின் நடைமுறைமூலம் உயிர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**உரிமைதுறக்கப்பட்ட ஆதனத்தை மீள உரித்தாக்கல்.**

23. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அவசரகால (பாதிக்கப்பட்ட ஆதனம், தொழில், கைத்தொழில் என்பவற்றைப் புனரமைத்தல்) ஒழுங்குவிதிகளின் பயனைக்கொண்டு அரசுக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தின், தொழிலின், அல்லது கைத்தொழிலின் சொத்தாண்மையானது, இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று எந்த ஆள் அத்தகைய ஆதனத்தின், தொழிலின் அல்லது கைத்தொழிலின் சொந்தக்காரராகவிருந்தாரோ அந்த ஆளுக்கு அவ்வொழுங்கு விதிகளினால் தாபிக்கப்பட்ட ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதற்கு அத்தகைய ஆளினால் கொடுக்கப்பட்ட பொறுப்பேற்றலொன்றின் மீது அவ்வொழுங்குவிதிகளின் கீழ் மீளப்பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளவிடத்து, செயலாளரானவர் அத்தகைய பொறுப்பேற்றலானது இணங்கியொழுகப் படவில்லை என அவர் திருப்திப்பட்டால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அத்தகைய ஆதனத்தை அரசுக்கு மீள உரித்தாக்கலாம்.

**தத்துவங்களைக் கையளித்தல்.**

24. (1) ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது அதன் தத்துவங்கள், கடமைகள் என்பவற்றுள் எதனையும் அதன் தவிசாளருக்கு, அல்லது வேறெவரேனும் பணிப்பாளருக்கு அல்லது எவரேனும் ஊழியருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்தத் தவிசாளருக்கு பணிப்பாளருக்கு அல்லது ஊழியருக்கு ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் தத்துவங்களுள் அல்லது கடமைகளுள் எதுவும் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்தத் தவிசாளர், பணிப்பாளர், அல்லது ஊழியர் அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும், ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைவாகப் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

**ஒழுங்குவிதிகள்.**

25. (1) அமைச்சரானவர், எந்தக் கருமங்களுக்காக ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்தக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியொவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதனகத்துக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியொவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர், வசதியானளவு விரைவில், அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதியொவ்வொன்றும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடிக்குப் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேதியன்று ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லா தொழிக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டுமோ, அந்தத் தேதியானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

26. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினலன்றி— பொருள்கோடல்.

"பாதிக்கப்பட்ட ஆதனம்" என்பது 1983, யூலை 24 ஆம் தேதியன்று அல்லது அதற்கு பின்னரும் 1983, ஓகத்து 8 ஆம் தேதிக்கு முன்னரும் கலகம்மூலம் அல்லது உண்ணாட்டுக் குழப்பம்மூலம் சேதப் படுத்தப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட ஏதேனும அசைவற்ற ஆதனம் என்று பொருள்படுவதுடன், கசெற்றில் வெளியிடப் பட்ட கட்டளைமூலம் அமைச்சரால் குறித்துரைக்கப்பட்டவாறான கலகம்மூலம் அல்லது உள்நாட்டுக் குழப்பம்மூலம் சேதப்படுத்தப் பட்ட அல்லது அழிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆதனத்தையும் உள்ளடக்குகின்றது ;

"பாதிக்கப்பட்ட தொழில் அல்லது கைத்தொழில்" என்பது 1983, யூலை 24 ஆம் தேதியன்றும் அல்லது அதற்குப் பின்னரும் 1983 ஓகத்து 8 ஆம் தேதிக்கு முன்னரும் கலகம்மூலம் அல்லது உண்ணாட்டுக் குழப்பம்மூலம் அழிக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட ஒரு கைத்தொழில் சார்ந்த இயல்பினதான அல்லது வர்த்தக, இயல்பினதான ஏதேனும் பொறுப்புமுயற்சி எனப் பொருள்படு வதுடன், அப்பொறுப்புமுயற்சியின் நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்பட்ட எல்லா அசைவுள்ளதும் அசைவற்றனவுமான ஆத னங்களையும் உள்ளடக்கும் ;

"பாதிக்கப்பட்ட ஆள்" என்பது எந்த ஆளுடைய அசைவுள்ள அல் லது அசைவற்ற ஆதனம் 1983 யூலை 24 ஆம் தேதியன்றும் அல் லது அதற்குப் பின்னரும் 1983 ஓகத்து 8 ஆம் தேதிக்கு முன்ன ரும் கலகம்மூலம் அல்லது உண்ணாட்டுக் குழப்பம்மூலம் அழிக் கப்பட்டதோ அல்லது சேதப்படுத்தப்பட்டதோ அந்த ஆளெவ ரும் என்றும் அல்லது எந்த ஆள் உடல் ரீதியாகப் பாதிக்கப்பட் டாரோ அந்த ஆள் என்று பொருள்படும் ;

"தவிசாளர்" என்பது 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் தவிசாளர் என்று பொருள்படும் ;

"வளவுகள்" என்பது 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ; அத்துடன்

"இயைபான தேதி" என்பது 1983 யூலை 24 என்று பொருள்படும்.

பிரிவு 3(4)

## அட்டவணை

### ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் பணிப்பாளர்கள் தொடர்பான ஏற்பாடுகள்

1. ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக, அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால்; அல்லது

(ஆ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலிருக்கும் ஏதே னும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல் லது வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்கி முறிந்தவரொருவர் என வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராகவிருந்து பொறுப்புவிடுவிக்கப்படாத, கடனிறுக்க வகையற்றவரொருவராக அல்லது வங்கி முறிந்தவரொருவராக இருந்தால் ; அல்லது

(ஈ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவிப்பவராக இருந்தால்,

அவர் பணிப்பாளரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து பணிப்பாளராக இருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

2. பணிப்பாளரெவரும், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதமொன்றின்மூலம் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதிலிருந்து விலகலாம்.

3. அமைச்சரானவர், 3(1) ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளரொருவராக நியமிக்கப்பட்ட ஆளெவரையும், அதற்கான காரணமெதனையும் குறிக்காமலே அகற்றலாம்.

4. (1) பணிப்பாளரொவ்வொருவரும், அவர் இறப்பு, பதவிவிலகல் அல்லது அகற்றுதல் என்பன காரணமாக முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலொழிய அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகாலமொன்றிற்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும் :

ஆயின், இறக்கின்ற அல்லது பதவி விலகுகின்ற அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்குகின்ற பணிப்பாளரொருவரின் இடத்தில் நியமிக்கப்படுபவரான பணிப்பாளரொருவர், அவர் முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலன்றி எந்தப் பணிப்பாளரை அடுத்துறுகின்றாரோ அந்தப் பணிப்பாளரின் பதவிக் காலப்பகுதியின் முடிவுறுது எஞ்சியுள்ள காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) தவிசாளர் அல்லது வேறெவரேனும் பணிப்பாளர், சுகவீனம் காரணமாக, குறைபாடு காரணமாக, அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய பணிகளைத் தற்காலிகமாக நிறைவேற்றுவதற்கு இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சரானவர், அத்தகைய தவிசாளரின் இடத்தில் தவிசாளராகச் செயலாற்றுவதற்கென வேறெவரேனும் பணிப்பாளரை அல்லது விடயத்திற்கேற்றவாறு அத்தகைய தவிசாளரின் அல்லது பணிப்பாளரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம்.

5. தவிசாளருக்கும் பணிப்பாளர்களுக்கும், அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

6. (1) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் தவிசாளரின் பதவிக் காலப்பகுதியானது, ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

(2) தவிசாளரானவர், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டு அனுப்பும் கடிதம்மூலம் முன்னராகவே தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்.

(3) அமைச்சரானவர் அதற்கான காரணமொன்றைக் குறிக்காமலே, தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்.

7. (1) இப்பந்தியின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது, கூட்டங்கள் தொடர்பிலும், அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பிலும், அதன் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(2) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

8. ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் பணிப்பாளர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும், அல்லது அதன் பணிப்பாளர்களுள் எவரது நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

9. (1) ஆ. பு. ஆ. கை. பு. அ என்பதன் இலச்சினையானது, ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது காலத்திற்குக் காலம் முடிவு செய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் இலச்சனையானது, ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் இலச்சனையானது, ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் இரண்டு பணிப்பாளர்களின் முன்னிலையிலன்றி எத்தகைய சாதனத்திலும் அல்லது ஆவணத்திலும் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் தாம் சமூகமளித்திருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) எந்தச் சாதனங்களில் அல்லது ஆவணங்களில் ஆ. பு. ஆ. கை. பு. அ. என்பதன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்கள் அல்லது ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றை ஆ. பு. ஆ. கை. பு. அ. ஆனது பேணுதல் வேண்டும்